**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

COS No. 141/2024

DW1 : Sekar S/o. Seethapathy

**18.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வட்டம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் வானகரம், சென்னையில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி. நான் பிரதிவாதி தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன்.

1. 10.07.2017 தேதியிட்ட P.C. Choudhary and Sons ல் என் பெயரில் வைத்த கடனுக்கான பதிவு அட்டையின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 1ஆம் பிரதிவாதியின் டெனா வங்கி கணக்கு அறிக்கையின் சான்றிட்ட நகல் (01.09.2017 முதல் 30.09.2017 வரை) **பி.வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 17.12.2018 தேதியிட்ட வாதி 2ஆம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட கடன் கோரிக்கை சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 12.04.2019 தேதியிட்ட வாதி 2ஆம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட கடன் கோரிக்கை சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 02.09.2020 தேதியிட்ட வாதி 2ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 10.10.2020 தேதியிட்ட வாதி 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **பி.வா.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 25.12.2020 தேதியிட்ட வாதி 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **பி.வா.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 10.12.2021 தேதியிட்ட நான் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. நான் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் சார்வு செய்யப்பட்டதற்கான ஒப்புகை அட்டை சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. IX Assistant, City Civil Court, Chennai (OP.No.2/2022) –ல் நிலேஷ் கடேல் என்பவர் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணம் மற்றும் அவருடைய சாட்சியம் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(**வாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் சான்றிட்ட நகல் என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது**).

**தாவாப்படி தள்ளுபடியாக கேட்டுக்கொள்கிறேன்.**

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.